**மனோகரன் – வெற்றிக்கதை**



நான் மனோகரன் 38 வயது விவசாய குடும்பத்தில் பிறந்தவன். என்னிடம் 8 ஏக்கர் நன்செய் நிலமுள்ளது. இதில் நெல் மற்றும் தென்னை பயிரிட்டு வருகிறேன். தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்துடன் கடந்த 5 வருடங்களாக தொடர்ந்து விவசாயியாக இருந்து வருகிறேன். என்னிடம் சுமார் 100 தென்னை மரங்கள் உள்ளன. இதில் விலையும் காய்களை உழவர் சந்தையில் விற்பது வழக்கம்.தினசரி விலை நிலவரங்களை தெரிந்து கொள்ளும் இலவச எஸ்.எம்.எஸ் சேவை பற்றி கும்பகோணம் மார்கெட் அனலிஸ்ட் மூலம் தெரிந்து கொண்டு என்னையும் இந்த திட்டத்தில் ஈடுபடுத்திக் கொண்டேன்.என்னிடம் நோக்கியா செல் போன் உள்ளது. அதில் மதியம் விலை நிலவரங்கள் குறுந்தகவலாக வரும்.

தினசரி கும்பகோணம் மார்கெட்டில் தென்னை விலை நிலவரங்கள் தெரிந்து கொள்வதால் விற்பனை செய்வது மிகவும் சுலபமாக இருக்கிறது. யாரிடமும் ஏமாறாமல் சரியான விலையில் தான் விற்பனை செய்கிறோம் என்ற மனநிலை ஏற்படுகிறது. இந்த சேவையை பற்றி மற்ற விவசாயிகளுக்கும் எடுத்து சொல்லி சேரச் சொல்லி வருகிறேன். ஒரு விவசாயி பயிரிடும் வரை விவசாயியாகவும் விளைந்த பின்பு வியாபாரியாகவும் ஆனால் மட்டுமே வாழ்க்கை தரம் விரைவில் உயரும் என்பதில் எந்த வித சந்தேகடும் இல்லை. இந்த கூற்றை நிருபிக்கும் வகையில் இந்த இலவச எஸ்.எம்.எஸ் சேவை உதவி செய்து வருகிறது. இந்த சேவை தமிழில் இருந்தால் மிகவும் உதவியாக இருக்கும். மேலும் வாய்மொழி செய்தியாக போனில் வந்தால் அதிக எண்ணிக்கையில் விவசாயிகள் சேர்வார்கள். கூட்டங்கள் மூலமாகவும் அதிகப்படியான விளம்பரம் செய்தவன் மூலம் அதிக நபர்களை இத்திட்டத்தில் சேர்க்கலாம். தொடர்ந்த விவசாயிகளுக்கு இலவசமாக சேவை செய்திட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவத்துக் கொள்கிறேன்.

திரு. மனோகரம்,

மெயின் ரோடு,

உத்திரை, ஏராகரம் அஞ்சல்,

கும்பகோணம் தாலுக்கா,தஞ்சாவூர் மாவட்டம்,

அலைபேசி: 09629394064